வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 28.05.2026 வியாழக்கிழமை இதழ் : 142 பக்கங்கள் : 08

# பொருளாதார உறுதிநிலையை அடைந்து வருகிறது இலங்கை!



## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவிப்பு

கொழும்பு, மே. 28

**நாடு தற்போது பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்து வருவதாகவும் இது இலகுவான விடயமாக இருக்கவில்லை எனவும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

**குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த 275 உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.**

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் புதிய வெளிநோயாளர் பிரிவு கேட்போர் கூடத்தில் வைபவம் இடம்பெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர், உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இவ்வருடம் நடைபெற்ற உலக சுகாதார மாநாட்டில் இலங்கையின் இலவச சுகாதார சேவைக்கு விசேட மதிப்பீடு வழங்கப்பட்டதாகவும், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சேவைக்காக நாட்டுக்கு பெரும் கௌரவம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும்

07

# தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள்!

## பிரதமர் மோடியிடம் முதல்வர் விஜய் கோரிக்கை

புதுடில்லி, மே. 28

"தமிழக அரசு நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும். இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்."

-இவ்வாறு பிரதமர் மோடியிடம், தமிழக முதல்வர் விஜய் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியை, முதல்வர் விஜய் டில்லியிலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது, பிரதமர் மோடி தனது நெதர்லாந்து நாட்டுப் பயணத்தின்போது,

07



இலஞ்சம் பெறுவதற்கு முயன்ற

# வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நேற்றுக் கைது!

கொழும்பு, மே. 28

வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்ட 19 சீனப் பிரஜைகளின் கடவுச்சீட்டுகளை சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கு உட்படுத்தாமல் அவர்களிடம் மீள வழங்குவதற்காக இலஞ்சம் பெற

07

# தீவக மக்களின் பிரச்னைகளுக்கு உடன் தீர்வு வழங்குங்கள்!

## அமைச்சர் இ.சந்திரசேகர் அதிகாரிகளுக்கு பணிப்புரை



யாழ்ப்பாணம், மே. 28

யாழ்ப்பாணம் தீவகத்தில், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் வேலணைப் பகுதிகளில் நிலவும், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், விவசாயம் உள்ளிட்ட மக்களின் அத்தியாவசிய பிரச்னைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விடயங்கள்

07

# சட்ட சிக்கல்களை ஒரேநாளில் திருத்தலாம் மாகாண சபைத் தேர்தலுக்கு அரசு அச்சம்!

## பொதுஜன பெரமுன் அரசுக்கு பதில்

கொழும்பு, மே. 28

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நிதிப் பற்றாக்குறை காரணமல்ல, சட்டச் சிக்கல்களே காரணம் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருந்த கருத்தை பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் முற்றாக நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் சாகர காரியவசம் மேலும் தெரிவித்ததாவது-

சட்டச் சிக்கல்கள் என்ற போர்வையில் ஒளிந்துகொண்டு,

07

# காணி விடுவிப்புக்கு இராணுவம் முட்டுக்கட்டை மக்களை ஏமாற்றுகிறார் அமைச்சர் சந்திரசேகர்!

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே. 28

வலி வடக்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதில் இராணுவம் தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக இருக்கின்ற நிலையில் அமைச்சர் சந்திரசேகரன் ஊடகங்கள் மூலம் மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டினார்.

நேற்று புதன்கிழமை யாழ்.-காங்கேசன்துறை வீதியில்

07

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு புதிய எக்கோ இயந்திரம் அன்பளிப்பு



யாழ்ப்பாணம், மே. 28

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவுக்கு, புதிய எக்கோ இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவிலுள்ள

07

# மட்டக்களப்பு விடுதியில் தீ; இரு சிறுவர்கள் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, மே. 28

மட்டக்களப்பு நகரிலுள்ள விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் சிக்கி இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் ஏற்பட்ட இந்த தீப்பரவலின்போது வெளியான நச்சுப் புகையால், அறையில் தங்கியிருந்த 3 வயது ஆண் குழந்தையும் 5 வயதுப் பெண் குழந்தையும் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

07

# அமைச்சர் விஜித ஹேரத்துக்கு நியூசிலாந்தில் பெரும் வரவேற்பு

கொழும்பு, மே. 28

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நியூசிலாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், அந்நாட்டின் வெளிநாட்டு அலுவல்கள் வர்த்தக அமைச்சின் வளாகத்தில் பாரம்பரிய வரவேற்பு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நியூசிலாந்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இத்தகைய பாரம்பரிய வரவேற்பைப்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் மானிய முறையை நிறுத்தும் திட்டம் எதுவுமில்லை!

## கூறுகின்றது மின்சக்தி அமைச்சு

கொழும்பு, மே. 28

மத்திய கிழக்கு பிராந்திய மோதல்களுடன் தொடர்புடைய நெருக்கடிகள் தணியும் வரை, தற்போதைய எரிபொருள் மானிய நடைமுறையை நிறுத்தும் திட்டம் எதுவும் அரசாங்கத்திற்கு இல்லை என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எரிபொருள் மற்றும் மின்சார விநியோகத்தில் ஏற்படும் நட்டத்தை அரசாங்கத்தால் காலவரையறையின்றி பொறுப்பேற்க முடியாது என அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து மின்சக்தி அமைச்சர் அநுர கருணாதிலக்கவிடம் வினவியபோது, ஜனாதிபதி கூறியது மானியத்தைக் காலவரையறையின்றி தொடர முடியாது என்பதைத் தான் என்றும், தற்போதைய நெருக்கடி நிலை தணிந்த பின்னரே இந்த மானியம் நீக்கப்படும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

பொதுமக்களின் பொருளாதார சுமையைக் குறைப்பதற்காக, தற்போதைய மானிய ஏற்பாட்டின் கீழ் அரசாங்கம் ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாயையும், ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாயையும் பொறுப்பேற்று வருகிறது. (அ)

# ஓமந்தையில் மாட்டுடன் மோதி ஓட்டோ விபத்து!

## ஒருவர் படுகாயம்

வவுனியா, மே. 28

வவுனியா ஓமந்தைப் பகுதியில் மாட்டுடன் மோதுண்டு கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோச் சாரதி படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏ-9 வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ வீதியில் திடீரென குறுக்கே வந்த மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானது. அவ்வேளையில், கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ, எதிரே வந்த டிப்பர் வாகனத்துடனும் மோதியுள்ளது.

இந்த இரட்டை விபத்தில் ஓட்டோ பலத்த சேதமடைந்ததுடன், அதன் சாரதி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பிரதமர் ஜூன் இறுதியில் பாகிஸ்தானுக்கு விஜயம்!

கொழும்பு, மே. 28

பிரதமர் ஹரிணி அமரசூரிய எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் மருத்துவர் நய்யார் நசீர் தெரிவித்துள்ளார்.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்தவுடன், விவசாய அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் லால் காந்த, “அரசியல் ரீதியாக இலங்கை மீது எவ்வித தேவையற்ற அழுத்தங்களையும் பிரயோகிக்காத ஒரு நாடாக பாகிஸ்தான் திகழ்கிறது” எனக் குறிப்பிட்டதுடன், எவ்வித அரசியல் இலாபங்களையும் எதிர்பார்க்காமல் இலங்கைக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வருவதற்காக பாகிஸ்தானுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்க-ஈரான் மோதல் விவகாரத்தில் பாகிஸ்தானின் தலையீடு பாராட்டுக்குரியது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தான் தூதுவர் நய்யார் நசீர் இதன்போது கருத்துத் தெரிவிக்கையில், "பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுமே விவசாய நாடுகளாக இருப்பதால், பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் உதவக்கூடிய திறன் காணப்படுகிறது.

கால்நடை உற்பத்தியிலும் பால் உற்பத்தியிலும் பாகிஸ்தான் உலகளவில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

எனவே, இந்த துறையில் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான உறவை வளர்ப்பதற்கான பெரும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

இலங்கைக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம்”-என்றார். (அ)

# சிறுவர்களின் சமூக ஊடக பயன்பாட்டை ஒழுங்குபடுத்தும் முறை குறித்து ஆராய்வு

கொழும்பு, மே. 28

15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குச் சமூக ஊடகங்களை முழுமையாகத் தடை செய்வதற்கு பதிலாக, வயதுக் குழுக்களின் அடிப்படையில் அதனை ஒழுங்குபடுத்தும் முறைமை குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் முன்வைக்கப்பட்ட 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான சமூக ஊடகத் தடை குறித்த முன்மொழிவு தொடர்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய சூழலில் தொழில்நுட்பத்தை சிறுவர்களின் வாழ்க்கையிலிருந்து முழுமையாக ஒதுக்கிவிட முடியாது எனச் சுட்டிக்காட்டிய பிரதி அமைச்சர், இதற்காக வயது அடிப்படையில் பிரிக்கப்பட்ட ஒழுங்குமுறை ஒன்றைக் கொண்டுவர அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதன்படி, மிகச் சிறிய வயதுடைய குழந்தைகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளும், நடுத்தர வயதுடைய குழந்தைகளுக்குக் கல்வி சார்ந்த இணையத் தளங்களுக்கான அணுகல்களும், 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்குப் பொறுப்பான முறையில் பயன்படுத்தும் சுதந்திரமும் வழங்கப்படலாம் என அவர் விவரித்தார்.

இந்தக் கட்டுப்பாடுகளை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்து தொழில்நுட்ப ரீதியான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு டிஜிற்றல் பொருளாதார அமைச்சைக் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் முழுமையான தடைக்கு பதிலாகக் கட்டுப்பாடுகளே விதிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். (அ)

# கையிருப்பில் உள்ள நெல்லை விற்பனை செய்வதற்கு அனுமதி

கொழும்பு, மே. 28

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் உள்ள நெல் கையிருப்பை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையால் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அண்ணளவாக 115,000 மெற்றிக்தொன் நெல்லில், போதியளவு பாதுகாப்பு இருப்புத் தொகையைப் பேணிக்கொண்டு எஞ்சியவற்றை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது அடுத்த பெரும்போகத்தில் நெல் கொள்வனவுக்குத் தேவையான களஞ்சிய வசதிகள் மற்றும் நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்காக எடுக்கப்பட்ட முடிவாகும்.

முறையான விலை மனுக்கோரல் முறைமையைக் கடைப்பிடித்து இந்த நெல் இருப்பை விற்பனை செய்ய கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# அநுராதபுரம் சிறுமிக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்!




யாழ்ப்பாணம், மே. 28

அநுராதபுரத்தில் பௌத்த துறவியால் சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு நீதி கோரி நல்லூர் ஆலய பின்புறத்தில் வடக்கு-கிழக்கு பெண்கள் கூட்டமைப்பினால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அநுராதபுரத்தில் சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான பௌத்த துறவி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த சிறுமிக்கு நீதி கோரிப் போராட்டத்தில் ஈடுபட்ட வடக்கு-கிழக்கு பெண்கள் கூட்டமைப்பினர், ஜனாதிபதி, நீதி அமைச்சர், சட்டமா அதிபர், மகளிர் விவகார அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு எழுத்து மூலமாக மகஜரை கையளிக்க ஏற்பாடு செய்தனர்.

# முறையான வடிகாலமைப்புத் திட்டம் யாழ். நகர பிரதேசத்துக்கு வேண்டும்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே. 28

யாழ். நகரப் பிரதேசத்துக்கு முறையான வடிகாலமைப்பு பிரதான திட்டம் மீளவும் தயாரிக்கப்படல் வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள்விடுத்தார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபை தலைமை அலுவலகத்தால் யாழ்.நகரத்துக்கான பிரதான வடிகாலமைப்புத் திட்டம் தயாரிப்பதில் பாரிய மோசடி இடம்பெற்றது.

அந்த மோசடிகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் அம்பலப்படுத்தப்பட்ட போதும் கடந்த 2020 காலப்பகுதியில் யாழ்.மாநகர சபையை ஆட்சி செய்த தரப்புக்களால் மூடிமறைக்கப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்தவரது ஆதரவுடன் மாநகர மேயராக கதிரை ஏறி தமது பதவிப் பசியை தீர்த்துக் கொண்டவர்கள், கோட்டா அரசின் ஊழலை மறைப்பதற்காக இவ் ஊழலை மூடிமறைத்தார்கள். அதனால் 1375 கோடியில் புதுப்பொலிவுடன் மிளிர்ந்திருக்கவேண்டிய யாழ்.நகரம் பாழாய்க் கிடக்கிறது.

எனவே தனிதனியாக திட்டங்களை தெரிவு செய்யாது யாழ். நகருக்கு என்று திட்டத்தை தயார்செய்து அதனை வைத்து பகுதி பகுதியான திட்டங்களை செய்யவேண்டும்-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
28.05.2026 வியாழக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## கட்சித்தாவல் தடைச் சட்டம் குறித்து அரசாங்கம் யோசிப்பது ஏன்?

கட்சித்தாவல் தடைச்சட்டமூலம் ஒன்றை அரசாங்கம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார, ஊடகத்துறை அமைச்சருமான நாளிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் மகாநாட்டில் அறிவித்தார்.

எதிரணி கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைய விரும்பினாலும் அவர்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சேர்த்துக்கொள்ள மாட்டாது. அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களில் எவரும் எதிரணிப் பக்கம் போகக்கூடிய அளவுக்கு அரசாங்கம் செல்வாக்கை இழந்து விடவில்லை. வெளியில் இருந்து எவரும் வந்து இணைந்துகொள்கிற அளவுக்கு எந்தவொரு எதிரணி கட்சியினதும் செல்வாக்கு இலட்சணமும் இல்லை.

வழமையாக அரசாங்கங்கள் கட்சித்தாவல் தடைச் சட்டங்களை கொண்டு வருவது குறித்து யோசிப்பது அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேறு கட்சிகளுக்கு மாறாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே. ஆனால். அமைச்சரவை பேச்சாளர் அந்த அறிவிப்பைச் செய்வதற்கு முன்னதாக அளித்த விளக்கம் விசித்திரமான ஒன்றாக இருக்கிறது.

"எதிரணிக் கட்சிகளில் இருந்து சில முக்கியஉறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கு இரகசியப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. 2024 நவம்பர் பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் மிகவும் தெளிவான ஒரு பாராளுமன்றத்தை தெரிவு செய்தனர்.தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டுக்கும். அதிகமான ஆசனங்களை (159) தந்து பலம்பொருந்திய அரசாங்கம் ஒன்றை மக்கள் பதவிக்கு கொண்டுவந்தனர்.

"வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஆணையை நாம் முழுமையாக மதிக்கிறோம். அதனால், பாராளுமன்றத்தில் தவித்துக் கொண்டிருக்கும் எதிரணிக் கட்சிகளில் இருந்து எவரையும் இணைத்துக்கொள்ள வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை. அவ்வாறு இணைத்துக் கொள்ளவதில் எமக்கு துளியளவிலும் விருப்பம் இல்லை" என்றும் அவர் அங்கு கூறினார்.


எதிர்காலத்தில் தேசிய மக்கள் சக்தியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிறக்கூடிய அளவுக்கு நாட்டின் பிரச்சினைகள் தீவிரமடையும் என்று அதன் தலைவர்கள் அஞ்சுகிறார்களோ தெரியவில்லை. தற்போது நடைமுறையில் இருக்கும் 1978 அரசியலமைப்பு ஆரம்பத்தில் கட்சித் தாவலுக்கு எதிரான கடுமையான ஏற்பாட்டைக் கொண்டிருந்தது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் வாக்காளர்கள் ஒரு குறிப்பிட்ட நபருக்கு பதிலாக, ஒரு கட்சியின் வேட்பாளர் பட்டியலுக்கே தங்கள் வாக்குகளை அளிப்பதால் பாராளுமன்ற ஆசனங்கள் அரசியல்வாதிக்கு அல்ல, கட்சிக்கே சொந்தமானதாக கருதப்படுகிறது.

அதனால் பாராளுமன்ற உறுப்பினர் தான் எந்த கட்சியின் மூலம் பாராளுமன்றத்திற்குள் பாரவேசித்தாரோ, அந்த கட்சியில் இருந்து மாறினால் அல்லது நீக்கப்பட்டால் அவர் தனது பாராளுமன்ற ஆசனத்தை தானாகவே இழப்பார். அந்த வெற்றிடத்தை கட்சி அதன் மூல வேட்பாளர் பட்டியலில் இருந்து நிரப்பும். இந்த ஏற்பாடு கட்சியில் ஒழுங்கு கட்டுப்பாட்டைப் பேணுவதற்கும் உதவியாக இருந்தது.

ஆனால், ஜெயவர்தன அரசாங்கம் அரசியலமைப்புக்கு கொண்டுவந்த இரண்டாவது திருத்தம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தன்னை நீக்கிய கட்சியின் நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றில் மனுவைத் தாக்கல் செய்ய அனுமதித்தது. வழக்குகள் நீண்டகாலத்துக்கு இழுத்தடிக்கப்படும் பட்சத்தில் அவர் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக இருக்க முடியும்.

சரத் என். சில்வா பிரதம நீதியரசராக இருந்த காலப்பகுதியில் (1999 -2009) அரசாங்கத்துக்கு மாறிய எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வழக்குகளில் நெறிமுறைப் பண்புகளின் அடிப்படையில் அன்றி நடைமுறை சார்ந்த குறைபாடுகளை மையமாக வைத்து தீர்ப்புகளை உயர்நீதிமன்றம் வழங்கியதை தொடர்ந்து கட்சி மாறலுக்கு எதிரான ஏற்பாடு பயனற்றதாகப் போய்விட்டது. மீண்டும் கட்சித்தாவலுக்கு எதிரான சட்டம் ஒனறைக் கொண்டு வருவதாக இருந்தால் இதுவரையான அனுபவங்களை கருத்தில் எடுத்தே அதைச் செய்ய வேண்டும்.

# ஒரு தேசத்தின் அவமானம்



"ஒரு துறவி, துறவறப் பயிற்சியையும் வாழ்க்கை முறையையும் ஏற்றுக்கொண்ட பிறகு, அந்தப் பயிற்சியை முறைப்படி துறக்காமலும் தனது பலவீனத்தை வெளிப்படுத்தாமலும், ஒரு பெண் விலங்குடன் கூட உடலுறவு கொண்டால், அவர் துறவற சமூகத்திலிருந்து நீக்கப்பட்டு, விலக்கி வைக்கப்படுவார்."

**- புத்தர் (இறுதித் தீர்ப்பு - வினய பிடகம் - நீக்கத்திற்குரிய குற்றங்கள் பற்றிய அத்தியாயம்)**

ஒரு மனிதன் கையில் ஒரு தொகுதி கோப்புகளை ஏந்தியபடி, அதன் சுமை அழுத்துவது போல கனத்த அடிகளுடன் ஒரு தாழ்வாரத்தில் நடந்து செல்கிறான். அவன் ஒரு கசங்கிய காகிதத்தை எடுத்து குப்பைத் தொட்டியில் போடுவதற்காக சற்று நிற்கிறான் இந்த ஒரு சிறிய செயல் அவனைப் பற்றி பலவற்றை வெளிப்படுத்துகிறது.

அவனது இலக்கு, அழகாக ஆடை அணிந்திருக்கும் ஒரு இளம் பெண்ணான அவனது புதிய மேலதிகாரியின் அலுவலகம் ஆகும். அவன் அந்த கோப்புகளை அவளது மேஜை மீது வைக்கிறான் அந்த சைகை அதிகாரபூர்வமான மற்றும் உளவியல் ரீதியான ஒரு விட்டுக் கொடுத்தலைக் (ராஜினாமாவை) காட்டுகிறது. தான் 20 வருடங்களாக ஒரு புலனாய்வு அதிகாரியாகப் பணியாற்றுவதாகவும், ஆனால் ஒருபோதும் தனது தலையை நிமிர்த்தித் தன் கடமையைச் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றும் அவன் தன் புதிய மேலதிகாரியிடம் கூறுகிறான்.

அந்த கோப்புகள் கைவிடப்பட்ட விசாரணைகள் பற்றியவை. அவளது புதிய மேலதிகாரி அவனிடம் அந்த கோப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, வேலையை மீண்டும் தொடங்குமாறு கூறுகிறாள் ஏனெனில் இப்போது அவனது இலக்குகளும் இந்த அரசாங்கத்தின் இலக்குகளும் ஒன்றுதான்.

அந்த அதிகாரி வெளியேறும்போது, அவனது நடையில் ஒரு துள்ளலும் கண்களில் ஒரு நம்பிக்கையும் தெரிகிறது.

2024 ஜனாதிபதித் தேர்தலை நோக்கிய காலகட்டத்தில், தேசிய மக்கள் சக்தி கருப்பொருள் சார்ந்த விளம்பரத் தொடர்களை நடத்தியது. "ஒரு சுதந்திரமான பொதுச் சேவை" என்பது மேற்கூறிய விளம்பரத்தின் தலைப்பாக இருந்தது. "அனைவருக்கும் நீதி" என்பது தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் மேடையின் ஒரு முக்கிய தூணாக இருந்தது. எதிர்கால தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தண்டனையில் இருந்து தப்பிக்கும் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நாட்டிற்கு உறுதியளிக்கப்பட்டது் குற்றம் சாட்டப்பட்டவரின் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு குற்றமும் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

ஒரு 14 வயது சிறுமி, சக்திவாய்ந்த - செல்வாக்கு மிக்க ஒரு துறவி தன்னை அவளது சொந்த தாயிடமிருந்து 1,00,000 ரூபாய்க்கு விலை கொடுத்து வாங்கி, பாலியல் வன்கொடுமை செய்ததாகக் குற்றம் சாட்டிய போது அந்த வாக்குறுதிக்கு என்னவானது?

"சிறுமி "எக்ஸ்டனும்" அட்டமஸ்தானத்தின் தலைமைத் துறவியுனும் சம்பந்தப்பட்ட இந்த வழக்கு, இந்த அரசாங்கத்திற்கும், எதிர்க்கட்சிக்கும், சாசனத்திற்கும் (பௌத்த கட்டமைப்பு), நாட்டிற்கும் மற்றும் குடிமக்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சோதனை வழக்காக அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி சமூகத்தின் அடிமட்டத்தைச் சேர்ந்தவள் மிகவும் ஏழ்மையானவள். ஆனால், குற்றம் சாட்டப்பட்டவரோ ஒரு பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர். அது மட்டுமன்றி, அவர் நாட்டின் மிகச் சக்தி வாய்ந்த துறவிகளில் ஒருவர் - பௌத்த மதத்தின் மிக புனிதமான எட்டு இடங்களான ஸ்ரீ மகா போதி, ருவன்வெலிசேய, தூபாராமய, லோவாமகாபாய, அபயகிரிய, ஜேத்தவனாராமய, மிரிசவெட்டிய மற்றும் லங்காராமய ஆகியவற்றின் தலைவர்.

அதிகாரத்தில் இருக்கும் இந்த மிகப்பெரிய சமநிலையின்மையைக் கருத்தில் கொண்டால், இந்த வழக்கும் தேசிய மக்கள் சக்தியின் விளம்பரத்தில் வந்த நேர்மையான அதிகாரி குறிப்பிடும் கைவிடப்பட்ட விசாரணைகளின் பட்டியலில்தான் சேரும். முன்னைய அரசாங்கங்கள் புறக்கணித்திருக்கக் கூடிய, மூடிமறைத்திருக்கக்கூடிய, மறதி என்ற பாய்க்குள் சுருட்டி வைத்திருக்கக்கூடிய ஒரு வழக்கு இத் இதனைத் தான் நீதியானதும் வெளிப்படையானதுமான ஒரு முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி அளித்திருந்தது.

அதுதான் வாக்குறுதி. ஆனால், உண்மை அதற்கு நேர்மாறாக மாறிக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர் முற்றிலும் எளியவராகவும் குற்றம் சாட்டப்பட்டவர் செல்வத்தினதும் மத அதிகாரத்தினதும் இருப்பிடமாகவும் இருக்கும் ஒருவர் குற்றத்தை எதிர்கொண்டபோது, இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களின் அதே அவச்சொல்மிக்க பாதையையே பின்பற்றத் தேர்ந்தெடுத்துள்ளது.

அது தட்டிக்கழித்தும், திசைதிருப்பியும் அமைதி என்ற புகலிடத்தைத் தேடியும் ஓடுகிறது. அமைச்சர் சரோஜா பால்ராஜின் ஒரு பலவீனமான அறிக்கையைத் தவிர, தேசிய மக்கள் சக்திஃ ஜே.வி.பி. தலைவர்கள் எவரும் - ஜனாதிபதி, பிரதமர், பொதுப் பாதுகாப்பு அமைச்சர், நீதி அமைச்சர், அதிரடிப் பேச்சுக்குரிய லால் காந்தா அல்லது தேசிய மக்கள் சக்தியின் பல பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் என எவருமே இந்த வழக்கைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

இவர்களின் இந்த மௌனம் எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சியிலுள்ள ஒவ்வொரு கட்சி, தலைமைப் பீடங்களின் நாயக்க தேரர்கள், பிற முக்கிய துறவிகள் மற்றும் பிரதான ஊடகங்கள் (பாரம்பரிய ஊடகங்கள்) ஆகியவற்றால் அப்படியே எதிரொலிக்கப்படுகிறது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் முறைப்பாடு செய்த சுயாதீன ஊடகவியலாளர் பிமல் ருஹூனுகே மற்றும் ஒரு சில யூடியூபர்கள் இணையத் தளங்கள் மட்டும் இல்லாவிட்டால், அரசாங்கத்தின் மூச்சுத் திணறடிப்பினாலும், எதிர்க்கட்சிகள் மற்றும் பிரதான ஊடகங்களின் முழுமையான ஆதரவினாலும் இந்த வழக்கு ஒரு இயற்கைக்கு மாறான மரணத்தைச் சந்தித்திருக்கும்.

விளம்பரத்தில், நீதிக்காகப் போராடும் அதிகாரிகளைப் பாதுகாப்பதாக தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி அளிக்கிறது. இங்கு உண்மை நிலை தலைகீழாக உள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமியின் நலனுக்காகப் போராடும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் கைவிடப்படுகிறார்கள். இணைய வழித் தகவல்களின்படி, அதிகாரசபையின் சட்டப் பணிப்பாளர் சஜீவனி அபேகோனுக்கு எதிராக மிகவும் கொடூரமான முறையில் அவதூறு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(நாளை தொடரும்)**

**- திசரானி குணசேகர**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உதவுவார்கள்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீடுகளைக்கட்டும். எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உங்களை சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். மதிக்கப்படுவீர்கள். நிறைவு பெறும் நாள்.

**கடகம்**
பால்ய நண்பர்களை சந்திப்பீர்கள். எதிர்மறை எண்ணங்கள் விலகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் பிரச்னையை தீர்த்து வைப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகன வசதி பெருகும். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விஷயங்களை பல முறை அலைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத்தன்மை தேவைப்படும்

**விருட்சிகம்**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். உறவினர்கள் நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். உத்தியோகத்தில் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வேற்றுமதத்தவர். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**மகரம்**
குடும்ப கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பாத்திரங்கள் ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

# இலங்கையின் தெங்கு ஏற்றுமதி வருவாய் 406 மில்லியன் டொலராக பாரிய உயர்வு!

கொழும்பு, மே. 28

2026ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கையின் தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த தயாரிப்புகளின் ஏற்றுமதி வருவாய் முன்னெப்போதும் இல்லாத வகையில் பாரிய வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை வெளியிட்டுள்ள சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, 2026 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் தேங்காய் துறை மூலமான ஏற்றுமதி வருவாய் 21.38 வீதத்தினால் அதிகரித்து 406.28 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் இலங்கைத் தயாரிப்புகளுக்குக் காணப்படும் பலத்த தேவையும், பாரம்பரியமாக முழுத் தேங்காய்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக அதிக மதிப்பு கூட்டப்பட்ட நவீன தயாரிப்புகளுக்கு மாறியதுமே இந்த வளர்ச்சிக்கு முக்கியக் காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# ஊவா மாகாணத்தில் 5 மாதங்களில் 80 சிறுவர் பாலியல் வழக்குகள் பதிவு

கொழும்பு, மே. 28

ஊவா மாகாணத்தில் கடந்த ஐந்து மாதங்களில் 80 சிறுவர் பாலியல் வழக்குகள் பதிவாகியுள்ளதாக மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 604 சிறுவர்கள் ஊவா மாகாணத்திலுள்ள 18 சிறுவர் இல்லங்கள் மற்றும் பராமரிப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் தீக்ஷனா எதிரிசூரிய தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வெள்ளவாய, மொனராகலை ஆகிய பகுதிகளில் இந்த சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த வருடத்துக்குள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 186 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

அவற்றில் 80 வழக்குகள் பாலியல் வன்கொடுமை மற்றும் கடத்தல் தொடர்பானவை என்றும், 60 வழக்குகள் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பொறுப்புரிமை தொடர்பானவை என்றும் ஆணையாளர் தீக்ஷனா எதிரிசூரிய குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து ஆபத்துக்களைக் குறைப்பதற்காக, பதுளையில் நேற்று விசேட பொது விழிப்புணர்வு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தகவல்களைப் பரிமாறிக்கொள்ள ஏதுவாக பேருந்துகள் மற்றும் பொது இடங்களில் "கியூ.ஆர்." குறியீடு மற்றும் தொலைபேசி எண்கள் அடங்கிய ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

இவ்வேலைத்திட்டம் பதுளை தலைமையக பொலிஸ் பரிசோதகர் சாணக்க சிரஞ்ஜீவ விஜேரத்ன மற்றும் ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் சேனக பெர்னாண்டோ ஆகியோரின் பங்கேற்புடன், பொலிஸ் மற்றும் போக்குவரத்து அதிகார சபையின் ஆதரவோடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

பெற்றோர்கள் உரிய பாதுகாப்பை வழங்கத் தவறுவதே பல சிறுவர்கள் ஆபத்துக்களை எதிர்கொள்ளக் காரணம் என ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வெற்றிடங்களை நிரப்ப உத்தரவு!

கொழும்பு, மே. 28

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசாரணை நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்குத் தேவையான பணியாளர்களை உடனடியாகப் பணியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சிறுவர் பாதுகாப்புத்துறையில் தற்போது நிலவும் பிரச்னைகள் மற்றும் இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து, அமைச்சருக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது, விசாரணைகள் மற்றும் அது சார்ந்த சேவைகளின் திறனை மேம்படுத்துவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய தன் அவசியம் உட்பட சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புடைய அண்மைக்கால முன்னேற்றங்கள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்துவதில் அந்த அதிகாரசபையின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாப்பது குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது. (அ)

# வாகன விற்பனையில் சரிவு ஏற்படும்!

கொழும்பு, மே. 28

வாகனங்கள் வாங்குவதற்காக வழங்கப்படும் கடன் வசதிகளில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களால் வாகன இறக்குமதி மற்றும் விற்பனையில் சரிவு ஏற்படவாய்ப்புள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர்.

மேலும், தற்போதைய சூழ்நிலையில் வாகனங்களின் விலை உயரும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நிதி அமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கும், அபாயங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் மோட்டார் வாகனங்களுக்காக வழங்கப்படும் கடன் வசதிகளின் (லீசிங்) எல்லைகளை நேற்று முன் தினம் முதல் மட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, புதிய திருத்தத்தின்படி, நாட்டில் பதிவு செய்து ஒரு வருடத்திற்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்படும் கடன் வசதி 60 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், அதிநவீன வாகனங்கள் மற்றும் நாட்டில் பதிவு செய்து ஒரு வருடத்துக்கும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்படும் குத்தகை வசதியும் இன்று முதல் குறைக்கப்படும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, பாரவூர்திகள் உள்ளிட்ட வர்த்தக வாகனங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட 70 வீத கடன் வசதி, புதிய திருத்தத்தின்படி 60 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. (அ)

# தரமற்ற மருந்துகளுக்கு முற்றுப்புள்ளி!

கொழும்பு, மே. 28

தரமற்ற, போலியான மற்றும் பதிவு செய்யப்படாத சுகாதார தயாரிப்புகளின் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான "தேசிய செயற்திட்டம்" ஒன்றைத் தயாரிப்பதற்கு ஆதரவளிக்கும் நோக்கில், உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கையில் ஒரு வார கால விசேட பணியை ஆரம்பித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை கிளையின் தகவல்படி, இந்த திட்டம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடனான உயர்மட்ட சந்திப்புடன் ஆரம்பமாகியுள்ளது.

குறித்த சந்திப்பின் போது சந்தைக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை வலுப்படுத்துதல், பாதுகாப்பற்ற மருத்துவப் பொருட்களைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றுக்கான முன்னுரிமை வேலைத்திட்டங்களை அடையாளம் காணுதல் போன்ற விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முறையான அனுமதிகளின்றி இலங்கையில் 60 வீதத்துக்கும் அதிகமான கட்டுமானங்கள்!

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, மே. 28

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானங்களில் 60 வீதத்துக்கும் அதிகமானவை எவ்வித முறையான அனுமதியுமின்றியே செய்யப்பட்டுள்ளன என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி வசந்த சேனாதீர-

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானங்களில் 60 வீதத்துக்கும் அதிகமானவை எவ்வித முறையான அனுமதியுமின்றியே செய்யப்பட்டுள்ளன. இந்த விபரீதப் பிரச்னைக்கு கிராமப்புற மக்களே அதிகம் முகங்கொடுக்கின்றனர். சட்ட ரீதியான வழிமுறைகள் மற்றும் நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு அவர்களுக்கு இல்லாததே இதற்கு முக்கிய காரணமாகும்.

நாட்டில் மண்சரிவு அபாயம் அதிகம் உள்ள பிரதான மாவட்டங்கள் 6 ஆகும். இது தவிர மேலும் 8 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதன்படி மொத்தம் 14 மாவட்டங்கள் இந்த அபாய வலயத்துக்குள் வருகின்றன. நாட்டின் மக்கள் தொகையில் 20 வீதம் முதல் 30 வீதம் வரையான மக்கள் இப்பகுதிகளிலேயே வாழ்கின்றனர்.

இலங்கையின் சட்டப்படி நாம் எந்தவொரு கட்டுமானத்தை மேற்கொள்வதாயினும், அதற்குரிய உள்ளூராட்சி சபையிடம் (நகர சபை,பிரதேச சபை) அனுமதி பெறவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாததால் தான் நாட்டில் 60 வீதத்துக்கும் அதிகமான கட்டுமானங்கள் சட்ட விரோதமாக அமைந்துள்ளன. குறிப்பாக மலையகத்தில் வாழும் மக்களுக்கு இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு அரச நிறுவனங்களுக்கு உள்ளது.

இலங்கையில் வாழ்வதற்கு தகுதியான நிலப்பரப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, இருக்கும் நிலத்தை நாம் முறையாக நிர்வகிக்கவேண்டும். ஆனால், மக்கள் தங்களுக்குத் தோன்றும் இடங்களில் எல்லாம் வீடுகளையும் ஏனைய கட்டுமானங்களையும் அமைத்து வாழ்கின்றனர்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஒரு நிலத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்குகிறது. இந்த அறிக்கையை அனைவரும் கண்டிப்பாகப் பெறவேண்டும். ஏனெனில், மக்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை வைத்தே இந்த கட்டுமானங்களைச் செய்கிறார்கள். ஆனால், ஒரு சிறிய இயற்கை அனர்த்தம் ஏற்பட்டால், ஒரு சில நொடிகளில் அந்த சொத்துக்கள் அனைத்தும் அழிந்துபோகும் அபாயம் உள்ளது.

இதற்கான முறையான வழிமுறைகள் உள்ளன, அதற்கு மக்களைப் பழக்கப்படுத்த வேண்டும். அதன் பின்னர் அவர்கள் அதனைச் சரியாகப் பின்பற்றுகிறார்களா என்பதைத் தொடர்ந்து கண்காணிக்கவேண்டும். துரதிஷ்டவசமாக நமது நாட்டில் இத்தகைய கண்காணிப்புகள் சரியாக நடப்பதில்லை-என்றார்.

(அ)

# பொருளாதாரம் 5 வீத நிலையான வளர்ச்சியை நோக்கி நகர்கிறது!

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் உறுதி



கொழும்பு, மே. 28

கடந்த இரண்டு வருடங்களாகப் பதிவான ஏறத்தாழ 5 சதவீத வளர்ச்சிப் போக்கிற்கு இணங்க, 2026ஆம் ஆண்டின் முதல் பாதியிலும் இலங்கையின் பொருளாதாரம் சீரான வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணிப்பதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைவரம் குறித்து விளக்கமளித்த ஆளுநர்,

2022 ஆம் ஆண்டின் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் நாட்டின் பொருளாதாரம் தொடர்ச்சியான மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மையைக் காட்டும் வகையில், இந்த ஆண்டின் முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுகள் நிலையான வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக அந்நியச் செலாவணி கையிருப்பு மற்றும் பணவீக்கம் ஆகியவை மிகவும் நிலையான மற்றும் நிர்வகிக்கக்கூடிய மட்டங்களில் உள்ளதால், 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போதைய பொருளாதார நிலை கணிசமான அளவு வலுவாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றங்கள் உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பிக்க முன்னர், இலங்கையின் வெளிவாரி, பணவியல் மற்றும் நிதித்துறைகள் உள்ளிட்ட முக்கிய துறை கள் சரியான திசையில் பயணித்துக் கொண்டிருந்ததாக வீரசிங்க சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான வெளிப்புற சவால்கள் ஏற்படும்போது, இலங்கையைப் போன்றே ஏனைய பொருளாதாரங்களும் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் கூறினார். (அ)

# இவ்வருட இறுதியில் வரலாற்றில் அதிகூடிய வெளிநாட்டுப் பண அனுப்புதல் பதிவாகும்!

கொழும்பு, மே. 28

இந்த ஆண்டின் இறுதிக்குள் இலங்கை வரலாற்றில் அதிகூடிய வெளிநாட்டுத் தொழிலாளர் பண அனுப்புதலைப் பெற முடியும் என எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோஷல விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 2025ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் கிடைத்த 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், 2026ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் 3.06 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டிற்குக் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த சாதகமான வளர்ச்சியின் மூலம், இவ்வருட இறுதியில் ஒட்டுமொத்த பண அனுப்புதல் 9 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர்ச் சூழல் நிலவியபோதிலும், வெளிநாட்டுத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பள உயர்வு, புதிய அரசாங்கத்தின் சாதகமான நடவடிக்கைகள் காரணமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைக்கு கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரம் மற்றும் தொழிலாளர்களுக்கான நலன்புரி வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளமை ஆகிய காரணங்களால் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# கட்சி தாவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியை ரத்து செய்யும் சட்டமூலம் விரைவில்!

கொழும்பு, மே. 28

பொதுமக்களின் வாக்குகளினால் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், மக்கள் ஆணைக்கு எதிராகக் கட்சி தாவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளை உடனடியாக இரத்து செய்வதற்கான புதிய சட்டமூலத்தை மிக விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

தற்போது அரசியல் அரங்கில் பல்வேறு கருத்துக்கள் மற்றும் வதந்திகள் பரவி வருகின்றபோதிலும், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு உறுப்பினரையும் ஆளுங்கட்சியுடன் இணைத்துக்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு எவ்வித தேவையும் அல்லது ஆயத்தமும் இல்லை என அமைச்சர் இதன்போது திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் விளக்குகையில்-

தங்களுக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணைக்கு துரோகம் இழைத்து, கட்சி தாவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்றப் பதவிகளை ரத்து செய்வதற்கான விசேட சட்டமூலத்தை மிக விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நாங்கள் எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்துக்குப் பொதுமக்களால் மிகவும் தெளிவானதொரு மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளதால், அதற்கமையவே அரசாங்கம் தனது எதிர்கால அரசியல் மற்றும் நிர்வாக நகர்வுகளை முன்னெடுக்கும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண சபைத் தேர்தலை அநுர அரசு நடத்த வேண்டும்

## திலகர் கோரிக்கை

கொழும்பு, மே. 28

"மாகாண சபை தேர்தல் தாமதமாவது சட்டக்குளறுபடிகள் காரணமாகவே என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் அத்தகைய சட்டக் குளறுபடிகள் இருப்பதை நன்கு அறிந்த நிலையிலேயே தேசிய மக்கள் சக்தி தாம் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்துக்குள்ளாக மாகாண சபை தேர்தலை நடத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளது. எனவே, நிலவுகின்ற சட்டச் சிக்கல்களை நிவர்த்தி செய்து மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தும் பொறுப்பு தேசிய மக்கள் சக்திக்கு அரசாங்கத்துக்கு உண்டு." என மலையக அரசியல் அரங்கத்தின் செயலாளர் நாயகமும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

'பவ்ரல்' அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்தபோதே திலகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் ஏதேனும் தேசிய முக்கியத்துவம் சார்ந்த விடயங்களில் அரசியல் கட்சிகளை அழைத்து பொது இணக்கப் பாட்டை ஏற்படுத்துவதற்கு பவ்ரல் போன்ற அமைப்புகள் கடந்த காலம் முழுவதும் செயற்பட்டு வந்துள்ளன.

அத்தகைய அனைத்துக் கட்சி கலந்துரையாடல்களில் மிக அரிதாகவே மக்கள் விடுதலை முன்னணி கலந்து கொள்ளும். இருந்தபோதும் தேசிய மக்கள் சக்தியாக உருவெடுத்த பின்னர் அதில் மாற்றம் தெரிகிறது. இன்றைய கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின்



பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் நிஹால் ஜெயசிங்க முழுமையாக கலந்து கொண்டு ஏனைய கட்சிகளின் கருத்துகளைக் கேட்டறிந்து கொள்வது வரவேற்கத்தக்கது.

இந்தக் கருத்துக்களை தமது அரசியல் கூட்டணிக்கு எடுத்துச் சென்று அவர்களின் தேர்தல் வாக்குறுதியின் பிரகாரம் மாகாண சபை தேர்தலை நடாத்துவதற்கு ஆளும் கட்சி என்ற வகையில் எடுக்க உந்துதல் அளிக்க வேண்டும்-என்றார். (அ)

# திறமையற்ற இந்த அரசை மக்களே விரட்டியடிப்பர்!

## சஜித் அணி கூறுகிறது

கொழும்பு, மே. 28

நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறி குறுக்கு வழியில் ஆட்சியைக் கைப்பற்ற ஐக்கிய மக்கள் சக்தி கனவு காண்பதாக ஆளுந்தரப்பு கூறுவது முற்றிலும் நகைப்புக்குரியது. இந்தத் திறமையற்ற அரசைக் கவிழ்க்க வேண்டிய தேவை எமக்கில்லை. இவர்களின் நிர்வாகச் சீர்கேட்டினால் மக்களே இவர்களை விரட்டியடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருள்களின் விலைவாசி உயர்வால் மக்கள் ஒருவேளை உண்பதற்கே வழியின்றித் தவிக்கின்றார்கள். விவசாயிகளுக்கு உரம் இல்லை, மின்சாரக் கட்டணம் உயர்ந்துள்ளது. எரிபொருள்களின் விலையும் அதிக விலைக்கு விற்கப்படுகின்றது.

இது நாங்கள் கூறும் பொய் அல்ல, நாட்டு மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் நிஜமான கண்ணீர். மக்களின் இந்த அவல நிலையை மறைக்கவே ஆளுந்தரப்பு எம் மீது பழிபோடுகின்றது.

அரசுக்கு இருக்கும் மூன்றிலிரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலம் குறித்து ஆளுந்தரப்பு பெருமை பேசுகின்றது. இந்த அரசு மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் குறித்து கவனம் செலுத்துகின்றார்கள் இல்லை.

ஒரு வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தற்போது தேர்தலைக் கால வரையறையின்றி பிற்போடுகின்றார்கள். அரசின் இல்லாதவர்கள் 2027 இல் தான் தேர்தல் நடக்கும் என்கிறார்கள்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் என்பது மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கே தவிர, மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதற்கோ அல்லது எதிர்க்கட்சிகளைத் திட்டுவதற்கோ அல்ல என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் ஜனநாயகப் பாதையிலேயே பயணிக்கும் ஒரு கட்சி. குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க வேண்டிய தேவை எங்களுக்குக் கிடையாது-என்றார். (அ)

# ஹற்றன் இரட்டைக் கொலை சந்தேக நபர் தப்பியோட்டம்!

கொழும்பு, மே. 28

ஹற்றன் டிக்கோயா நகரில் வர்த்தக நிலையமொன்றில் கூரிய ஆயுதங்களால் தாக்கி கொலை செய்யப்பட்ட நிலையில் வயோதிப தம்பதியினர் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் இருந்தபோது நேற்று அதிகாலை சிறை அதிகாரிகளிடமிருந்து தப்பிவிட்டதாக சிறை அதிகாரிகள் தன்னிடம் தெரிவித்தனர் என ஹற்றன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகர தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இரட்டைக்கொலைச் சம்பவத்தின் சூத்திரதாரி என சந்தேகிக்கப்படும் நபர், பொகவந்தலாவை பெற்றோசோ பகுதி வீடொன்றில் மறைந்திருந்த போது பொதுமக்களின் உதவியுடன் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது அவரை எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. அவருக்கு திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டதன் காரணமாக, சந்தேக நபர் நேற்று முன்தினம் சிறை அதிகாரிகளால் கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சந்தேக நபர், நேற்று அதிகாலை தப்பியோடியுள்ளார்.

மேலும், தப்பிச் சென்ற சந்தேக நபரை பொலிஸார் உட்பட சிறைச்சாலை அதிகாரிகள் தேடி வருகின்றனர். (அ)

# இறைச்சிக் கடைகள் மதுபானச்சாலைகள் மூன்று நாள் பூட்டு!

கொழும்பு, மே. 28

2026 ஆம் ஆண்டு தேசிய வெசாக் பண்டிகையை முன்னிட்டு அனைத்து மதுபானச்சாலைகள், இறைச்சிக் கடைகள், பந்தய மையங்கள், சூதாட்ட விடுதிகள் மற்றும் இரவு விடுதிகள் மூன்று நாள்களுக்கு மூடப்பட்டிருக்கும் என்று பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, மே 30, மே 31 மற்றும் ஜூன் 1 ஆகிய திகதிகளில் நாடு முழுவதும் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகளை மூடவும், பல்பொருள் அங்காடிகளில் இறைச்சி விற்பனையை நிறுத்தி வைக்கவும், பந்தய மையங்கள், சூதாட்ட விடுதிகள், மதுபானக் கடைகள் மற்றும் இரவு விடுதிகளை மூடவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், 2026 ஆம் ஆண்டு அரச வெசாக் விழாவை முன்னிட்டு, மே 27 முதல் ஜூன் 2 வரை வெசாக் வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொறுப்புடன் நடக்காத இலங்கை மத்திய வங்கி

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 28

இலங்கை மத்திய வங்கி சுயாதீனம் என்று குறிப்பிட்டுக் கொண்டு தன்னிச்சையாக செயற்படுகிறது. அமெரிக்க டொலர் அதிகரிப்பு மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி ஆகியவற்றை கட்டுப்படுத்த மத்திய வங்கி பொறுப்புடன் செயற்படவில்லை. இந்த விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு பாராளுமன்ற விசேட தெரிவுக் குழு ஒன்றை அமைக்குமாறு வலியுறுத்தியுள்ளேன் என புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

உலகளாவிய ரீதியில் டொலரின் பெறுமதி உயர்வடையும் சாத்தியம் காணப்படுகின்ற நிலையில், டொலர் கையிருப்பை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மத்திய வங்கியிடம் வலியுறுத்தினோம். இருப்பினும் மத்திய வங்கி அதனை கருத்திற் கொள்ளவில்லை.

பாராளுமன்ற குழுவில் முன்னிலையாகிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, தொகைகடன் பொருளாதாரத்துக்கு ஒருபோதும் தாக்கம் செலுத்தாது என்று குறிப்பிட்டார். ஆனால் மத்திய



வங்கி வெளியிட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தொகைகடன் செலுத்துவதற்கு வருடாந்தம் 4500 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் பாராளுமன்றத்துக்கும் பொய்யுரைத்துள்ளார். இலங்கை மத்திய வங்கி சுயாதீனம் என்று குறிப்பிட்டுக் கொண்டு தன்னிச்சையாக செயற்படுகிறது. அமெரிக்க டொலர் அதிகரிப்பு மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி ஆகியவற்றை கட்டுப்படுத்த மத்திய வங்கி பொறுப்புடன் செயற்படவில்லை. இந்த விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு பாராளுமன்ற விசேட தெரிவுக் குழு ஒன்றை அமைக்குமாறு வலியுறுத்தியுள்ளேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கும், தற்போதைய நிதி முகாமைத்துவ சிக்கலுக்கும் இலங்கை மத்திய வங்கியே பொறுப்புக்கூற வேண்டும். தற்போதைய டொலர் மற்றும் ரூபா நெருக்கடியை முகாமைத்துவம் செய்வதற்கு மத்திய வங்கி முன் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை-என்றார். (அ)

# சீனாவின் தொழில்நுட்ப உதவியுடன் மின்கல மின்சக்தி களஞ்சிய திட்டம்!

கொழும்பு, மே. 28

சீனாவின் தொழிநுட்ப உதவிகளுடன் நாட்டில் மின்சாரத்தை விநியோகிக்கும் 16 துணை மின்நிலையங்களுக்காக 160 மெகா வோல்ட் முதல் 640 மெகா வோல்ட் கொள்ளளவு கொண்ட மின்கல மின்சக்தி களஞ்சிய கட்டமைப்பு காலி மற்றும் மாத்தறை ஆகிய மின் விநியோக துணை மின்நிலையங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்று துறைமுக மற்றும் சிவில் சேவை அமைச்சு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில்,

இலங்கையின் மின்சக்தித் துறையில் புதியதொரு அத்தியாயத்தைக் குறித்து நாட்டின் முதலாவது வர்த்தக ரீதியான மின்கல களஞ்சியக் கட்டமைப்பு அண்மையில் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நாட்டில் மின்சாரத்தை விநியோகிக்கும் 16 துணை மின்நிலையங்களுக்காக 160 மெகா வோல்ட் முதல் 640 மெகா வோல்ட் கொள்ளளவு கொண்ட மின்கல களஞ்சிய திட்டங்களை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் கடந்த 2025 ஆம் ஆண்டு ஜூலை 30 அன்று போட்டித்தன்மையுடனான விலை மனுக்களை கோரியது. அதன் அடிப்படையில் 4 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மின்சக்தி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய கட்டமைப்பு நிறுவனம் இந்த திட்டத்துக்கு தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது-என்றுள்ளது. (அ)

# நாட்டில் இதுவரையில் 203 பேர் மூளைக் காய்ச்சலால் பாதிப்பு!

கொழும்பு, மே. 28

நாட்டின் பல பகுதிகளிலிருந்து இதுவரையில் 203 பேர் மூளைக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெனியாய, தியத்தலாவ, ரிபில்லகல்கட, கண்டி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து பாதிப்புகள் குறித்து பதிவாகியுள்ளது.

நோய் பரவலைக் கட்டுப்படுத்த தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பொருளாதார...

தெரிவிக்கையில்-

குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள், குறிப்பாக இளம் பெண்கள் மற்றும் தாய்மார்கள், வீடுகளுக்கு சென்று மக்களுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றி, அவர்களுக்குத் தாய்மார்களாகவும், தோழிகளாகவும், சகோதரிகளாகவும் ஆகின்றனர். இவ்வாறு அவர்கள் வழங்கும் சேவையை மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

இந்த நாட்டில் உள்ள குடும்ப சுகாதார சேவை, தொற்றா நோய்கள் பிரச்னையைத் தீர்ப்பதில் தற்போது ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது. புதிதாக நிறுவப்பட்ட சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்களில் உள்ள குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளுக்கும் ஒரு முக்கியப் பங்கு வழங்கப்படும். எதிர்காலத்தில், குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளின் சேவைகளுக்காக அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கவும், அடுத்த ஜனவரியில் வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

## தமிழக மீனவர்களை...

ஆனைமங்கலச் செப்பேடுகளை மீட்டு இந்தியாவுக்குக் கொண்டு வந்ததற்காக முதல்வர் நன்றி தெரிவித்துள்ளார்.

"மாநில வாழ்த்துப் பாடலான தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலேயே எப்போதும் பாடப்பட்டு வந்தது.

எனினும், உள்துறை அமைச்சால் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்து, சில குறிப்பிட்ட அரசு நிகழ்ச்சிகளில், தேசியப் பாடல் முதலாவதாகப் பாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் மாநில வாழ்த்துப் பாடலைப் பாடுவதற்கு உள்துறை அமைச்சால் உரிய தெளிவுரையினை வழங்கவும்." எனவும் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் மிகக் கவலைக்கிடமான அளவிற்கு அதிகரித்துள்ளது எனவும் விஜய் சுட்டிக்காட்டியுள்ளார்.

2026-ஆம் ஆண்டில் மட்டும் 12 கைதுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்றும், தற்போது 58 மீனவர்கள் இலங்கையில் காவலில் உள்ளனர் என்றும், 266 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் பிரதமரிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.

எனவே, மீனவர்களையும் அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை, இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று பிரதமர் மோடியை முதல்வர் விஜய் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## வெலிக்கடை பொலிஸ்...

முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் மாஅதிபருக்கு கிடைத்த முறைபாட்டிற்கமைய மத்திய குற்ற விசாரணை பணியக அதிகாரிகள் குழுவினரால் நேற்றுக் காலை சந்தேக நபரான பொறுப்பதிகாரி, வெயங்கொடைப் பகுதியில் கைது செய்யப்பட்டார்.

கடந்த 02ஆம் திகதி வெலிக்கடை பகுதியில் இணையத்தள மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 92 சீனப் பிரஜைகள் ஹோட்டலொன்றில் தங்கியிருந்த நிலையில் வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

குறித்த சந்தர்ப்பத்தில் அங்கிருந்தவர்கள் தப்பிச்சென்றதுடன் அவர்களில் 19 பேரின் கடவுச்சீட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபரான வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மற்றுமொரு பெண்ணுடன் இணைந்து குறித்த கடவுச்சீட்டுகளை மீண்டும் சீனப் பிரஜைகளுக்கு வழங்குவதற்காக இலஞ்சம் பெற முயன்றுள்ளார்.

இதன்போது நபர் ஒருவரிடமிருந்து அவர் 03 இலட்சம் ரூபாவை இலஞ்சமாகக் கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மத்திய குற்ற விசாரணை பணியக அதிகாரிகள் கடந்த 17ஆம் திகதி வெலிக்கடை பொலிஸ் நிலையத்தை சோதனையிட்ட போது அங்கு கடவுச்சீட்டுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

பின்னர் குறித்த 19 கடவுச்சீட்டுகளும் சந்தேகநபரான பொறுப்பதிகாரியினால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார். (அ)

## தீவக மக்களின்...

தொடர்பான விசேட கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில், வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன் மற்றும் ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன் உள்ளிட்டோருடன், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை பிரதிநிதிகள், துறைசார் அதிகாரிகள், கடற்படை, இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதி மற்றும் பாதுகாப்பு பிரச்னை குறித்து அமைச்சர் கவலை வெளியிட்டார்.

நெடுந்தீவுப் பகுதியில், பாடசாலை கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் குறைவாக உள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், கல்வித் துறையில் நிலவும் பிரச்னைகளுக்கு, முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காணும் வகையில் விசேட செயற்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

நெடுந்தீவு போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் "நெடுந்தாரகை" மற்றும் "வடதாரகை" படகுகளின் திருத்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர், அடுத்த மாதத்தில் சேவைக்கு கையளிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீவுப் பகுதிகளில், வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும், அவசர மருத்துவ சேவைகளுக்காக அம்புலன்ஸ் வண்டிகள் தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அனலைதீவுக்கு விரைவில் அம்புலன்ஸ் வண்டி வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீவுப்பகுதி வைத்தியசாலைகளை புனரமைப்பதற்காக உலக வங்கியின் நிதி உதவியுடன் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 ஆயித்து 500 இற்கும் மேற்பட்ட மலசலகூடங்கள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலும் வலியுறுத்தப்பட்டதாக, அமைச்சர் குறிப்பிட்டார்.

நீண்ட காலமாக இடம்பெற்று வரும் கால்நடை திருட்டுகளைக் கட்டுப்படுத்த, பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மண்டைதீவு சோதனைச் சாவடியின் பாதுகாப்பை கடற்படையுடன் இணைந்து மேலும் பலப்படுத்தவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.(அ)

# வவுனியா மாமடுவ குளத்தில் தோணி கவிழ்ந்து மீனவர் உயிரிழப்பு

வவுனியா, மே. 28

வவுனியா மாமடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமடுவ குளத்தில் தோணியிலிருந்து தவறி விழுந்து நீரில் மூழ்கிய நிலையில் 60 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் காலை மாமடுவ குளத்தில் நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக மாமடுவ பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

உயிரிழந்தவர் மாமடுவ பகுதியைச் சேர்ந்த 60 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் தோணி ஒன்றின் உதவியுடன் மாமடுவ குளத்தில் மீன்பிடிக்கச் சென்று, மீண்டும் கரைக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக தோணியிலிருந்து தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## காணி விடுவிப்புக்கு...

அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலைமையில் வலி.வடக்கு விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர்த்து இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் வலி.வடக்கில் இராணுவத்திடம் உள்ள பொதுமக்களின் காணிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோது அதில் கலந்துகொண்ட இராணுவ உயர் அதிகாரிகள் காணி விடுவிப்பு தொடர்பில் சாதகமான பதிலை வழங்கவில்லை .

உயர் பாதுகாப்பு நிலையத்தில் பொதுமக்களின் காணிகளைத் திருட்டுத்தனமாக அபகரித்து இராணுவ வைத்தியசாலை கட்டப்பட்டுள்ள நிலையில் குறித்த காணிகளை விடுவிப்பதற்கு இராணுவம் மறுத்துவிடடதாக அறிகிறோம்.

அது மட்டுமல்லாது உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பாடசாலை, சிறுவர் பூங்கா மற்றும் ஆலயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோதும் இராணுவத்தினர் சாதகமான பதில்களை வழங்கவில்லை.

வலி.வடக்கு காணிகள் தொடர்பாக குறித்த கலந்துரையாடல் அமைந்தபோதும் தமிழ்த் தேசியம் சார்ந்து இயங்குகின்ற கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் குறித்த கலந்துரையாடல இடம்பெற்றமை எமது சந்தேகங்களை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் மக்களின் காணிகள் மக்களுக்கே எனக் கூறி ஏமாற்றி வருகின்ற நிலையில், இராணுவத்தினர் தமது செயற்பாடுகளில் உறுதியாக இருப்பது இந்த உயர்மட்ட கலந்துரையாடல்களில் முடிவுகள் எடுக்கப்படாமல் இருப்பதற்கு காரணமாகும்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உயர்மட்ட கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது உண்மைகளை மூடி மறைத்து தகவல் வழங்கியுள்ளார்.

இராணுவத்தினர் காணி விடுவிப்பு தொடர்பில் உடன்படாத நிலையில் விரைவாக காணி விடுவிப்பு இடம்பெறும் என ஊடகங்களுக்கு கருத்து கூறியிருப்பது மக்களை முட்டாளாக்கும் செயற்பாடாகும்.

இந்த அரசாங்கம் பொறுப்பேற்று ஒன்றரை வருடங்கள் கடக்கின்ற நிலையில் வலி.வடக்கில் இராணுவத்திடம் உள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

ஆகவே மக்களின் காணிகளை மக்களுக்கு வழங்காது தொடர்ந்தும் இராணுவ கட்டுமானங்களை மேற்கொண்டு வரும் தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையில் வந்த ஜே.வி.பி. தொடர்பில் தமிழ் மக்களை விழிப்பாக இருக்கவேண்டும்-என்றார். (அ)

## மட்டக்களப்பு...

உயிரிழந்த குழந்தைகள், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தாயை பார்வையிடுவதற்காக தந்தையுடன் பதுளையிலிருந்து மட்டக்களப்புக்கு வந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் குழந்தைகளை அறையில் தங்கவைத்து தந்தை வெளியே சென்றிருந்த நிலையில், விடுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## யாழ். போதனா...

எமரல் காடியாக் என்ற நிறுவனத்தினால், 16 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இதன் மூலம், ஆயிரக்கணக்கான இதய நோய் சார்ந்தவர்களுக்கான சிகிச்சையை வழங்க முடியும் எனவும், குறித்த இயந்திரமானது, இருதய சிகிச்சை பிரிவுக்கு மிகவும் அவசியமானதாக காணப்படுவதாகவும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இருதயத்தின் செயற்பாடுகளை மிக துல்லியமாக அறிந்து கொள்வதற்கு, இந்த இயந்திரம் பயன்படும் எனவும், பணிப்பாளர் குறிப்பிட்டார். (அ)

## சட்ட சிக்கல்களை...

தேர்தலைத் தள்ளிப்போடவே தற்போதைய அரசு முயற்சிக்கின்றது. கடந்த காலங்களில் இதே சட்டச் சிக்கல்களைப் பேசிக்கொண்டே தேர்தல்கள் முடக்கப்பட்டன.

தற்போது மூன்றிலிரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டுள்ள இந்த அரசுக்கு, அந்தச் சட்டச் சிக்கல்களை ஒரே நாளில் நாடாளுமன்றத்தில் திருத்த முடியும். அவ்வாறு செய்யாமல் காலம் தாழ்த்துவது, தற்போதைய அரசியல் சூழலில் தேர்தலை எதிர்கொள்ள அரசு அஞ்சுவதையே காட்டுகின்றது.-என்றார். (அ)

## அமைச்சர் விஜித...

பெற்ற முதல் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் தாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வாறானதொரு பாரம்பரிய வரவேற்பு நிகழ்வின் மூலம் கௌரவிக்கப்பட்டதை பெரும்பேறாகக் கருதுவதாக அமைச்சர் அவரது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

எதிர்வரும் 03ஆம் திகதி வரை அமைச்சர் அங்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# கபில சந்திரசேனவின் கைபேசிக்குள் உள்நுழைய முயற்சிக்கும் அதிகாரிகள்!

## எவ்.பி. ஐ. அமைப்பிடம் உதவிக் கோரிக்கை

கொழும்பு, மே. 28

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவின் கைபேசியை அன்லொக் செய்வதற்கு (உள்நுழைவதற்கு) அமெரிக்காவின் எவ்.பி.ஐ. அமைப்பின் உதவி கோரப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

குபில சந்திரசேனவின் மரணம் தொடர்பான நீதவான் நீதிமன்ற விசாரணை 5 ஆவது நாளாகவும் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த விடயம் அறிவிக்கப்பட்டது.

கைபேசியை அன்லொக் செய்வதற்கான உதவிக்கோரிக்கை மின்னஞ்சல் மூலம் எவ்.பி.ஐ. அமைப்பிடம் விடுக்கப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கிருந்து கிடைக்கப் பெறும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் கைபேசி தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கபில சந்திரசேனவின் மரணம் குறித்து இதுவரை 18 நபர்களிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நீதவான் இதன்போது தெரிவித்தார்.

நேற்றைய தினம் இரு சாட்சிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியமளித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, கபில சந்திரசேனவுக்கு சட்டப் பிரதிநிதித்துவம் வழங்கிய ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்ன மற்றும் அவரது உதவிச் சட்டத்தரணி ஆகியோரை மேலதிக சாட்சியங்களை வழங்குவதற்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கோரியிருந்ததாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், உத்தியோகபூர்வ நீதிமன்றக் கடமைகள் காரணமாக அவர்கள் நேற்று முன்னிலையாகவில்லை எனத் தெரிவித்த அதிகாரிகள், அவர்களுக்கு அழைப்பாணை வழங்கி பிறிதொரு திகதியில் நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவிடுமாறு கோரினர்.

இதற்குப் பதிலளித்த நீதவான், இந்த வழக்கில் இதுவரை சாட்சியமளித்த 18 சாட்சிகளும் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவே நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளித்தனரே தவிர, எவருக்கும் உத்தியோகபூர்வ அழைப்பாணை விடுக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

எனவே, இந்த இரு சட்டத்தரணிகள் விடயத்திலும் அதே நடைமுறையையே பின்பற்றுமாறு உத்தரவிட்ட நீதவான், அவர்களுக்கு அழைப்பாணை விடுவிக்குமாறு கோரிய விசாரணை அதிகாரிகளின் கோரிக்கையை நிராகரித்தார். (அ)

# இலங்கையில் புகையிலை மாபியா இதனால் தினசரி மரணங்கள் பதிவு!

## மதுசாரம், போதைப்பொருள் தகவல் நிலையத்தின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க பரபரப்புத் தகவல்

கொழும்பு, மே. 28

இலங்கையில் புகையிலை பாவனையானது சர்வதேச ரீதியில் ஆயுதம், போதைப்பொருள் மற்றும் மருந்துப் பொருள் மாபியாக்களைப் போன்று மிக மோசமாக வியாபித்துள்ளதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை கூறினார்.

பிரித்தானியாவில் சிகரெட் அறிமுகமாகி 100 முதல் 150 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்த புகையிலை பாவனையின் காரணமாக உலகளவில் ஏராளமான குடும்பங்கள் கடுமையான வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புகையிலை பாவிப்பவர்களைத் தவிர, புகைபிடிக்காத- ஆனால் அந்த புகையை சுவாசிக்க நேரிடும் 1.8 வீதமான இரண்டாம் தரப்பினர் உயிரிழக்கும் சம்பவங்களும் இந்த புகையிலை பாவனையினால் நாட்டில் இடம்பெறுகின்றன. பொதுவாக புகைப்பவர்களில் இருவரில் ஒருவர் புகையிலை பாவனையினாலேயே உயிரிழக்கும் அவலநிலை காணப்படுகின்றது.

சிகரெட்டில் கலக்கப்படும் "நிக்கொட்டின்" எனப்படும் இரசாயனம், மனிதர்களை மிக எளிதாகப் போதைப் பொருள் பாவனைக்கு வழிவகுக்க வல்லதாக அமைந்துள்ளது. அதேவேளை, புகையிலை பாவனையின் காரணமாக 200 இற்கும் அதிகமான தொற்றாத நோய்கள் ஏற்படும் அச்சுறுத்தல் நிலை உருவாகியுள்ளது.

சுகாதாரப் பாதிப்புகள் மட்டுமன்றி, பொருளாதார ரீதியிலும் கூட இதனால் பாரியளவில் சேதம் ஏற்படுகின்றது. புகைத்தலால் இலங்கையில் ஏற்பட்ட சுகாதார மற்றும் பொருளாதாரச் செலவு மாத்திரம் 214 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

அதேபோன்று, சுற்றுச்சூழலுக்கும் இந்த புகையிலை பாவனையானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சிகரெட் பில்டர்கள் கண்ட இடங்களில் அகற்றப்படும் போது, அதில் காணப்படும் மைக்ரோ பிளாஸ்ரிக் காரணமாக ஒட்டுமொத்த சுற்றுச்சூழலும், நீர்நிலைகளும் கடுமையான பாதிப்புக்குள்ளாகின்றன. இந்த நிலையை மாற்றவே, 2010க்கு பின் பிறந்தவர்களைக் காக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த "புகையிலை இல்லா தலைமுறை" கொள்கைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# தினமும் இரவு 8 மணி வரை பலாலி வீதி திறந்திருக்கும்!

யாழ்ப்பாணம், மே. 28

பலாலி வீதியை மேலும் ஒரு மணி நேரம் திறந்து விடுவதற்கு இராணுவத்தினர் பெரும்பாடுபட்டு சம்மதித்துள்ளனர்.

பலாலி வீதியில் சுமார் 2.5 கிலோ மீற்றர் நீளமான வீதி உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்கிறது. குறித்த பகுதியை கடந்த ஆண்டு நேரக்கட்டுப்பாட்டுடன் இராணுவத்தினர் போக்குவரத்துக்கு அனுமதித்தனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற காணி விடுவிப்பு தொடர்பிலான விசேட கலந்துரையாடலின் போது, குறித்த வீதியை 24 மணி நேர போக்குவரத்துக்கு அனுமதிக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் கோரிக்கையை முன் வைத்தார்.

அதற்கு இராணுவத்தினர் மறுத்துள்ளனர். அழுத்தமான கோரிக்கைகளை தொடர்ந்து மேலும் ஒரு மணி நேரம் வீதியை திறந்து விட அவர்கள் சம்மதித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் இதுவரை காலமும் காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரையில் திறந்து விடப்பட்ட வீதியை தற்போது ஒரு மணி நேரம் நீடித்து இரவு 8 மணி வரையில் போக்குவரத்துக்கு திறக்க இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர். (அ)

# புதிய கட்சி ஆரம்பித்தார் பொன்சேகா டிசெம்பர் முதல் தீவிர அரசியலில்!



கொழும்பு, மே. 28

புதியதொரு கட்சியை உருவாக்கி இருப்பதாகவும், வருட இறுதி முதல் அக்கட்சி ஊடான நடவடிக்கை இடம்பெறும் எனவும் முன்னாள் இராணுவத் தளபதில் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.


கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

"எமது கட்சியில் எவ்வாறானவர்களை இணைக்கவேண்டும் என நாம் வகுத்த நிர்ணயங்களுக்கமைய 75 வீத பணி நிறைவு பெற்றிருக்கின்றது. பாராளுமன்றத்தில் இருக்கவேண்டிய நபர்கள் பற்றிய தேடுதல் தற்போது இடம்பெறுகின்றது.

ஆரம்பத்தில் நானே கட்சிக்கு தலைமை வகிப்பேன். அதன்பின்னர் சிறந்தவர்களுக்கு இடமளிக்கப்படும். நான் 100 வருடங்களுக்கு அரசியலில் ஈடுபடமுடியாதுதானே?

அரசாங்கம் வலுவாக பயணித்தால் எமது ஆதரவு வழங்கப்படும். ஆனாலும் சிறந்த மாற்று சக்தியொன்றும் இருக்க வேண்டும். தற்போது எதிரணியில் இருக்கும் கட்சிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும்."-என்றார் பொன்சேகா. (அ)

# குறிகாட்டுவானில் மூழ்கிய கடற்பாதையை மீட்க கடற்படையினருக்கு 17 மில்லியன் ரூபா!



யாழ்ப்பாணம், மே. 28

நயினாதீவு இறங்குதுறையில் கடல் நீரில் தாழ்ந்து காணப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்த மான கடல் "பாதையை" கரைக்கு கொண்டுவரும் நடவடிக்கை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வேலணை பிரதேச செயலகத்தில், குறி கட்டுவான் இறங்குதுறை புனரமைப்பு தொடர்பாக போக் குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு அமை ச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், நயினாதீவு படகு உரிமையாளர்கள் சங்கம் முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடலில் தாழ்ந்து காணப்பட்ட இந்தப் படகு காரணமாக அப்பகுதியில் படகுகளை நிறுத்துவது மற்றைய படகோட் டிகளுக்கு நீண்ட காலமாக சிரமமாக இருந்து வந்தது.

மேலும், எதிர்காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை யினால் இயக்கப்படவுள்ள புதிய கடற் பாதையை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கும் இந்த நடவடிக்கை அவசியமாக இருந்தது.

கடற்பாதையை அகற்ற கடற்படையினருக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 17 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# ஹேமசிறி , பூஜித் ஜயசுந்தவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, மே. 28

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை ஜூன் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு மேல் நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கை உளவுத் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை மற்றும் குற்றவியல் ரீதியாக கடமையிலிருந்து தவறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலை யாகியிருந்தனர்.

இதனையடுத்து, இந்த வழக்குகளுக்குத் தேவையான சமர்ப்பணங்களை முன்வைப்பதற்காக, வழக்குகளை ஜூன் மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media